2017 மார்ச் 24]

(ஆ) போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற சுமார் 65,000 தொழிலாளர்கள் தங்களுக்கு ஓய்வூதியம், ஓய்வுகால பணப் பலன்கள் எதுவும் கிடைக்காததால், கடந்த 10 நாட்களாக அனைத்துப் பணிமனைகளின் முன்பாகத் தொடர்ந்து காத்திருப்புப் போராட்டம், முற்றுகைப் போராட்டம் என நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக தங்களிடத்திலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். சொல்லுங்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1–9–1998 முதல் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் ஓய்வூதியத் திட்டம், ஒப்பந்தம்மூலம் அமல்படுத்தப்பட்டது. 2006 ஆம் ஆண்டு விதிகள் உருவாக்கப்பட்டு, அவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. திட்டத்திற்கான நிதியாக, தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்படும் 12% தொகைக்கு இணையாக 12% நிருவாகப் பங்கு மற்றும் வட்டியும் அறக்கட்டளைக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. 2001–ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு, அந்த ஓய்வூதியத் திட்டம் நிறுத்தப்பட்டு, அதன் பிறகு, சேமநல நிதி என்ற பெயரில் 50 ரூபாய் பிடித்தம் செய்யப்பட்ட பின்னர், ஓய்வூதியமும் வழங்கப்படவில்லை. ஆகவே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *2001–ல், நிலுவையில் இருந்த ஓய்வூதியம் நீதிமன்ற உத்தரவின்படி மீண்டும் வழங்கப்பட்டது. ஓய்வூதிய அறக்கட்டளை முழுமையாக இயங்கிட வருமான வரி விலக்கு*

[திரு. டி. செங்குட்டுவன்] [*2017 மார்ச் 24*

கிடைக்காத காரணத்தினால், அந்தந்தக் கழகங்களே ஓய்வூதியத்தை வழங்கி வந்தன. 2007 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், ஓய்வூதிய சீரமைப்புக் குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் பெறப்பட்டன. 2010–ல் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களால்தான் ஓய்வூதிய நிதிக்கான வருமான வரி விலக்கு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. போக்குவரத்துக் கழக வருங்கால வைப்பு நிதி நம்பகத்திலுள்ள பங்கை, ஓய்வூதிய அறக்கட்டளைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் பிரச்சினையை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாக கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துவிட்டு, பெரிய விவாதமாக நடத்தினால் எப்படி ? போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் பிரச்சினைதானே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். உட்காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1–4–2003–க்குப் பிறகு பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால், ஓய்வூதிய நம்பகத்திற்குப் பெறப்படும் பங்குத் தொகை மிகவும் குறைந்துவிட்டது. ஆனால் வழங்க வேண்டிய தொகை பன்மடங்கு உயர்ந்துவிட்டது.*

(சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கரி. இராமசாமி எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. இராமசாமி, இன்று பேச இருக்கிறீர்களே ! உட்காருங்கள்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *2009–2010–ல் போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை 31 ஆயிரம். ஆனால், தற்போது 65 ஆயிரம் பேர் ஓய்வூதியதாரர்களாக இருக்கிறார்கள். தற்பொழுது ஓய்வூதியத்திற்குப் பெறப்படும் நிருவாகத்தினுடைய பங்குத் தொகை 20 கோடி ரூபாய். ஆனால், வழங்க வேண்டிய தொகை 74 கோடி ரூபாய். மாதா மாதம் 54½*

2017 மார்ச் 24] [திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]

கோடி ரூபாய் அளவிற்கு ஓய்வூதியம் வழங்குவதிலே பற்றாக்குறை ஏற்படுவதால், ஓய்வூதியம் வழங்கப்படாமல் நிலுவையிலே இருந்தது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துக்கூறியவுடன், வருகின்ற 28 ஆம் தேதி நிலுவையிலே இருக்கக்கூடிய 65,000 ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று உறுதியளித்திருக்கிறார்கள். வருகின்ற 28 ஆம் தேதி அவர்களுக்குரிய ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் முனைவர் க. பொன்முடி, திரு. உ. மதிவாணன், திரு. கே.எஸ். மஸ்தான், திரு. த. மனோ தங்கராஜ், டாக்டர் இரா. மாசிலாமணி, திரு. பி. முருகன், திரு. கே.எஸ். மூர்த்தி ஆகியோர் எழுந்து பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டனர்.)

(இ) ஆலங்குளம் தொகுதி, பொத்தான்பிள்ளை குடியிருப்புப் பகுதியில் சிறுத்தைகள் நடமாட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அவரவர்களுடைய பிரச்சினைகளை இன்றைக்கு எழுப்ப வேண்டும் என்று சொல்கிறீர்கள். முடிந்தவரை வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நீங்கள் சுருக்கமாக ஒரு நிமிடத்தில் சொன்னீர்களென்றால், அனைவருக்கும் வாய்ப்புக் கிடைக்கும். நீங்கள் அனைவரும் ஒரு விவாதம் மாதிரி நடத்தினீர்கள் என்றால், என்னால் அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்தில் பொத்தான்பிள்ளை குடியிருப்பு என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமமானது முண்டன்துறையிலிருந்து களக்காடு வரையிலும் புலிகள் சரணாலயம் இருக்கின்ற இடத்தில் அமைந்துள்ளது. நேற்றைக்கு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். கடையம் 29 மைல்* range*–ல் ஆலங்குளம் தொகுதிக்குட்பட்டு வருகிறது. கடந்த 9 மாதங்களாகக் கிட்டத்தட்ட 10 முறை சிறுத்தைகள் அந்தக் கிராமத்திற்கு வந்து மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 75–க்கு மேற்பட்ட ஆடுகளும், கறவை மாடுகள்*